## SCHOOL ANTHEM – பாடசாலை கீதம்

வாழ்க வாழ்க வளமுடன் - எங்கள்

ஆலி-எல தமிழ் வித்தியாலயம் !!!

வாழ்க …

ஆறுகள் மலைகள் அணைத்திடும் இயற்கை

அமைந்துள்ள பதியாம் ஆலி-எலையில்

அமைத்த எங்கள் வித்தியாலயம்

அவணியில் சிறந்து அனைத்தும் பெற்றிட ….!

வாழ்க …

கல்வி உயர்ந்திட கலைகளில் சிறந்திட

நிலையினை உயர்த்திட நேர் வழி சென்றிட

அஞ்சுதல் நீக்கும் ஆலி-எலை தமிழ் வித்தியாலயம்

அகிலம் போற்றிட எழில் நலம் பெற்றிட !

வாழ்க …

அறியுயர் ஆசான்கள் அள்ளி வழங்கிடும்

நெறி பல கற்போம் நித்தமும் பணிவோம்

அறிவு ஆற்றல் அடக்கமும் சூழ்ந்திட

ஆக்கத்தின் ஒளியாய் ஊக்கத்தின் வழியாய்

வாழ்க …

பாரினில் சிறந்த பல் தொழில் புரிந்திட

சீருடன் நின்று சிறப்பாய் நடந்திட

ஆற்றிடும் சேவையில் அகிலமே போற்றிட

ஆலி- எலை தமிழ் வித்தியாலயம்

வாழ்க …